வெளியீட்டு எண்:8
பிப்ரவரி 4ந் தேதி 2006ஆம்

# அரசுசாரா நிறுவன தகவல் இதழ்

பி.பெ.வ.கூ. அரசுசாரா நிறுவன தகவல் மற்றும் ஆவண அலுவலகம்
No: 6, Chanda Sahib street, Pondicherry, 605 001. India.
Telephone: +91 413 520 0606 Fax: +91 413 520 0607
Email: infoinde@ader-france.org

தென்னிந்தியாவில் அதிகமான தொண்டு நிறுவனங்கள் இருப்பதால் அவைகளுக்கு உதவி செய்யும் பொருட்டு (ADER-ASSOCIATION POUR LE DEVELOPPEMENT ECONOMIQUE REGIONAL) அதாவது, பி.பொ.வ.கூ. (பிராந்திய பெருளாதார வளர்ச்சி கூட்டமைப்பு) என்ற ஒரு பிரஞ்சு தொண்டு நிறுவனமும் மற்றும் FDF- (LA FONDATION DE FRANCE) அதாவது, பி.த.ஸ். (பிரன்ச் தர்ம ஸ்தாபனம்) என்ற ஒரு பிரன்ச் தொண்டு நிறுவனமும் இணைந்து துவக்கிய அரசுசாரா நிறுவன தகவல் அலுவலகத்தை பி.பொ.வ.கூ. புதுவையில் நடத்திவருகிறது. இந்த அலுவலகம் சுனாமி சம்மந்தமான அனைத்து தகவல்களையும் பெற்று, தயார் செய்து தகவல் மடலாக மாதம் இரு முறை தமிழ், ஆங்கிலம் மற்றும் பிரன்ச் மொழிகளில் வெளியிடுகிறது.

## உள்ளடக்கம்

- **செய்திகளின் தொகுப்பு**
  - பேரிடர் மேலாண்மை
  - கல்வி
  - சுற்றுச் சூழல்
  - மீவைச் செய்திகள்
  - நிவாரணம் மற்றும் புனரமைப்பு
- **புதிய ஆன்லைன் வளங்கள்**
- **நிகழ்வுகளின் பட்டியல்**

## செய்திகளின் தொகுப்பு :-

***பேரிடர் சம்மந்தமான நிதிஉதவி கணக்கு மற்றும் தணிக்கை சிறப்பு குழுவின் முதல் கூட்டத்தின் அறிக்கை.***

தீ ஹக்கில் பேரிடர் சம்மந்தமான நிதிஉதவி கணக்கு மற்றும் தனிக்கையின் சிறப்பு குழுவின் முதல் கூட்டம் நடந்தது. இதில் நெதர்லாந்து நாட்டின் தலைமை ஆடிட்டர் திருமதி. ஸ்டியிலினிங் சிறப்பு குழுவிற்கு தலைமையேற்றார். இந்தோனேசியாவின் உயர் தணிக்கை பள்ளி மற்றும் கோரிய நாட்டை சேர்ந்தவர்களின் துணை தலைமையில் இக்கூட்டம் நடந்தது. இக்கூட்டத்தில் சிறப்பு குழு அமைப்பது மற்றும் அதன் எதிர் கால நடவடிக்ககைகளின் ஒரு நடவடிக்கயைாக இரண்டு கிளை அமைப்பது. முதல் கிளை இந்தோனிசிய தலைமையிலும் – இது சுனாமி சம்மந்தமான பிரச்சனைகளின் கவனம் செலுத்தும். இரண்டாவது கிளை கோரிய தலைமையிலும் இது நடைமுறை பிரச்சனைகளான பேரிடர் சம்மந்தமான நிதி உதவியை தணிக்கை செய்வதற்கு வழிகாட்டியை தயார் செய்வது போன்ற முடிவுகளை எடுத்தனர். மேலும், தீ ஹக்குவில் சிறப்பு குழுவின் நடவடிக்ககைகளை பிரிவுபடுத்தி நன்கொடை நாடுகள் மற்றும் சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகள் அல்லது மற்ற இயற்கை பேரிடர் நாடுகள் பங்களிப்புக்கு ஒத்துக் கொண்டுள்ளனர்.

இது சம்மந்தமான மற்ற அமைப்புகளான ஐக்கிய நாட்டு சபை (UN), தொண்டு நிறுவனங்களின் கூட்டமைப்பு, பொருளாதார ஒத்துழைப்பு வளர்ச்சி கூட்டமைப்பு (OECD) மற்றும் சர்வதேச தணிக்கை சங்கங்களிடம் தொடர்பு கொள்வதை பற்றியும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

பிப்ரவரி மாதத்தில் இன்டோசாய் (INTOSAI) உருப்பினர்கள் மற்றும் சிறப்பு குழுவின் நடவடிக்ககைளால் விருப்பம் உள்ளவர்கள் தெரிந்து கொள்ளும் வகையில் இணையத்தளம் ஒன்றை நிருவ ஒப்புக்கொண்டுள்ளனர்.

முழுமையான பேரிடர் சம்மந்தமான உதவி கணக்கு மற்றும் தணிக்கை பிரத்யேக குழுவின் முதல் கூட்டம் மார்ச்மாதம் 2006 ஆண்டு ஜனவரியில் நடத்த உள்ளனர்.
ஆதாரம்:http://www.intosai.org/Level6/Tsunami_Initiative/6_TsunNewsLet0106.html

## தமிழ்நாடு

*இரு குழுவினர்க்கு இடையே நடந்த சண்டையில் மூன்று மீனவர்கள் காயம்.*

கடந்தவாரம் செவ்வாய்க்கிழமை நாகை மாவட்டத்தில் உள்ள அக்கரைப்பேட்டை மீனவ கிராமத்தில் இரு குழுவினர்க்கு இடையே நடந்த சண்டையில் மூன்று மீனவர்கள் படுகாயம் அடைந்தனர். போலிஸ் தரப்பில் கூறப்படுவது, அக்கரைப் பேட்டை கிராமத்தில், கிராம மீனவப் பஞ்சாயத்தில் புதிதாக சிலர் பொறுப்பு ஏற்றுக்கொண்டனர். அவர்கள் ஏற்க்கனவே பதவியில் இருந்தவர்களிடம் பஞ்சாயத்து கணக்கை ஒப்படைக்கும்படி வலிறுத்தினார்கள்.

ஆனால் பதவி முடிந்து வெளியே செல்வோர் கணக்கு சமர்ப்பிக்கவில்லை. இதன் விளைவாக அக்கிராமத்தில் பதட்டம் நிலவியது இந்நிலையில் புதிய மற்றும் பழைய பஞ்சாயத்து அலுவலக ஊழியர்களிடையே கலவரம் ஏற்பட்டது.

ஆதாரம்:http://www.newindpress.com/NewsItems.asp?ID=IET20060202034154&Page=T&Title=Southern+News+%2D+Tamil+Nadu&Topic=0&

---

# பேரிடர்
# மேலாண்மை

---

## அந்தமான் மற்றும் நிக்கோபார்

*வெளிநாட்டு கப்பலுக்கு தடை சுனாமியை பற்றிய ஆராய்ச்சி பாதிப்பு*

இந்திய அரசு, கடந்த ஆண்டு இந்தியப் பெருங்கடலில் ஏற்பட்ட சுனாமி மற்றும் எதிர்காலத்தில் ஏற்படும் பேரழிவுக்கு முன்னெச்சரிக்கை பற்றி புரிந்துகொள்ளும் முயற்சிக்கு தடையாக உள்ளது.

தேசிய பாதுகாப்பிற்காக இந்திய அரசு வெளிநாட்டு கப்பல்களுக்கு தடை விதித்துள்ளது. இதன் காரணமாக நிலநடுக்கம் வடபகுதியல் ஏற்ப்படுத்திய 1300 கி.மீ. நில பள்ளம் பற்றிய ஆய்வு செய்ய ஆராய்ச்சி கப்பலும் செய்ய இயலவில்லை. விஞ்ஞானிகள் கூலுகையில் மற்ற நாடுகளில் இதுப்போன்ற ஆராய்ச்சி குழுவிற்கு அனுமதி அளிப்பார்கள். 20 ஆண்டு காலமாக அயல்நாட்டு விஞ்ஞானிகள் இந்திய ஆராய்ச்சியாளர்களுடன் ஒன்றிணைந்து தங்களுக்கு கிடைத்த குறைவான தகவல்களை பறிமாறிக் கொள்கின்றனர்.
ஆதாரம்:http://www.scidev.net/gateways/index.cfm?fuseaction=readitem&rgwid=3&item=News&itemid=2618&language=1

## கல்வி

### தமிழ்நாடு

*சுனாமியால் பாதித்த மாணவர்களுக்கு கொடுத்த சலுகை முறையாக அருல்படுத்தவில்லை.*

சென்னையில் அரசாணையை மீறும் வகையில் சில மாணவர்களை பள்ளிக்கட்டணம் செலுத்த வற்புறுத்தியுள்ளனர். சுனாமி ஏற்ப்பட்ட உடன், மாநில அரசு உதவி பெறும் மற்றும் உதவி பெறாத கல்லூரி உட்பட கல்வி நிறுவனங்கள் பள்ளிக்கட்டணம் மற்றும் சிறப்பு கட்டணம் பாதித்த மாணவர்களிடம் இருந்து ஜனவரி 2005 ஆம் ஆண்டிற்கான கட்டணம் வசூலிக்கக்கூடாது என்று அறிவுறுத்தி இருந்தது.

இருந்தபோதிலும், இச்சட்டத்தை மீறும் வகையில் மாணவர்களிடம் இருந்து விளையாட்டு மற்றும் கணினிக்காக இதரக்கட்டணங்கள் என்ற பெயரில் மாணவர்களிடம் இருந்து பணம் பெற்று விடுகின்றன. 3000க்கும் மேற்பட்ட மாணவர்கள் இப்பிரச்சனையை நீதி மன்றத்திற்கு கொண்டு சென்றிருக்கின்றனர்.

லதா, கல்லூரி மாணவி, தாசில்தாரால் கொடுக்கப்பட்ட சான்றிதழை வைத்திருக்கிறார். அதில் மாவணவர்கள் கட்டணம் செலுத்த விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. அவர் கூறுகையில் இதை காட்டிய போதும் அவர்கள் கட்டணத்ததை பெற்றுக் கொண்டு இரசீது தர மறுத்து விட்டார்கள் என்றார்.
ஆதாரம்:http://www.newindpress.com/NewsItems.asp?ID=IE920060125222504&Page=9&Title=Chennai&Topic=0&

## சுற்றுச் சூழல்

### தமிழ்நாடு

*தமிழ்நாட்டில் சூரிய சக்தியால் இயங்கும் சாதனத்தின் பயன்பாடு அதிகரித்துள்ளது.*

தமிழ்நாடு மாநில அரசு சுனாமி மறுகட்டுமான திட்டம் சக்தி சேமிப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக சூரிய சக்தியால் இயங்கும் சாதனங்களின் பயன்பாட்டை கடலோரப்பகுததிகளில் அதிகரிக்க முடிவு செய்துள்ளது.

சூரிய சக்தியின் முக்கியத்துவத்தை உணர்ந்து சட்டமன்ற உறுபினர்கள் தங்கள் தொகுதி வளர்ச்சி நிதியில் சூரிய சக்தியால் இயங்கும் சாதனங்களை நிறுவியுள்ளனர். இதன் மூலம் அதிகரித்து வரும் மின்சார தேவை குறைவதுடன் இதனால் மீன கட்டணமும் குறையும்.

சில சுனாமியால் பாதித்த பஞ்சாயத்துகள், அரசிடம் கட்டணத்தால் ஏற்படும் கூடுதல் நிதி சுமையை குறைக்க வலியுருத்தி உள்ளனர். இதன் விளைவாக அரசு, தொண்டு நிறுவணங்கள் மேற்கொண்டிருக்கும் மறுகட்டுமான நடவடிக்கையால் தெருவிளக்கு போன்ற சூரிய சக்தியால் இயங்கும் சாதனங்களையும் அத்திட்டத்தில் இணைத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளது.

திரு. சி. வி. சங்கர், சிறப்பு பணி (சுனாமி நிவாரணம்) கூறுகையில் சுனாமி மறுகட்டுமானப்பணி சூரிய சக்தியால் இயங்கும் சாதனங்களின் பயன்பாட்டை அதிகரிக்க சிறந்த வாய்ப்பு. சூரிய சக்தியால் இயங்கும் சாதன்ங்களை அரசு தொண்டு நிறுவனங்களிடம் வாய்ப்பு இருக்கும் எல்லா இடங்களிளும் பயன்படுத்துமாறு கூறி இருக்கிறது என்றார்.
ஆதாரம்: http://www.hindu.com/2006/01/29/stories/2006012907020300.htm


Ader
FONDATION DE FRANCE

## மீனவ செய்திகள்

*சுனாமியால் இந்திய கடல் உணவு ஏற்றுமதி பாதிப்பு*

டிசம்பர் 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியால் நாட்டில் தெற்கு கடலோர பகுதியில் இருந்த மீன்வள்ர்ப்பு பண்ணைகள் மற்றும் இரால் பண்ணைகள் கடுமையாக பாதிக்கப்பட்டன இதனால் இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் கடல் உணவின் அளவு குறைந்துள்ளது. கடல் பொருட்கள் ஏற்றுமதி வளர்ச்சி குழுமம் (எம்.பி.ஈ.டி.ஏ) வெளியிட்டுள்ள தனது அறிக்கையில் இந்த நிதி ஆண்டில் 2005–06) முதல் எட்டு மாதத்தில் 287,984 டன்னாக இருக்கும் கடல் உணவு கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் 298,339 டன்னாக இருந்தது.
ஆதாரம் : http://www.hindustantimes.com/news/181_1604214,00020008.htm

### புதுவை

*புதுவையில் குறைந்து வரும் மீன்பிடிப்பால் மீனவர்கள் பாதிப்பு*

டிசம்பர் 26ஆம் தேதி 2004ஆம் ஆண்டிற்கு பிறகு மீன்பிடிக்கும் அளவு குறைந்து வருகிறது. இதனால் புதுவை மீனவர்கள் பாதிப்பு. இது மீன் பிடிக்கும் காலமாக இருந்த போதிலும் குறிப்பிடத்தக்க அளவு மீன்கள் பிடிக்கவில்லை என்று மீனவர் ஒருவர் கூறினார். கடலோரத்தில் இருந்து 50 முதல் 60 கி.மீ. தூரம் வரை சென்றாலும் நிறைய மீன்கள் கிடைப்பதில்லை என்று டி.எத்திராஜ், மீன்பிடி துறைமுக குழு உறுப்பினர் கூறினார். புதிய கண்ணாடி இழை பிளாஸ்டிக் படகு, பிளாஸ்டிக் படகு மற்றும் கில்வலையை பயன்படுத்தும் போதிலும் சில நாட்களில் மீனவர்கள் வெறுங்கையுடன் திரும்புகின்றனர் என்று மேலும் எத்திராஜ் கூறினார். சுனாமிக்கு முன் மீனவர்கள் ரூபாய் 5,000 முதல் 7,000 வரை ஒரே பயணத்தில் சம்பாதிப்பார்கள், ஆனால் தற்பொழுது ரூபாய் 1000 கிடைத்தாலே அதிர்ஷ்டம் என்கிறார்கள். மீன்பிடி தரமும் மோசமாகி இருக்கிறது.
ஆதாரம்:http://www.newindpress.com/NewsItems.asp?ID=IET20060117001352&Topic=0&Title=Southern%20News%20-%20Tamil%20Nadu&Page=T

## நிவாரணம் மற்றும் புனரமைப்பு

### அந்தமான் மற்றும் நிக்கோபார்

*அந்தமான சுனாமி புனரமைப்பை விரைவு படுத்த முடிவு*

- இந்திய அரசு 2004ஆம் ஆண்டு அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளின் சுனாமியால் பாதிக்கப் பட்டவர்களுக்கு மேற்கொள்ளும் புனரமைப்பு பணியை விரைவுப்படுத்த தீர்மாணித்துள்ளது. மத்திய அரசு புனரமைப்பு நடவடிக்கையை விரைவுபடுத்த சில முடிவுகளை எடுத்துள்ளது. அவைகள்

- சுனாமியால் பாதித்த 10,000 குடும்பத்தினர்களுக்கு நிரந்தர வீடுகட்டும் பணியை விரைவுபடுத்தி மற்றும் அவ்வீடுகள் பாரம்பரிய அமைப்பிலான வடிவம் கொண்டிருக்கும்.

- நிரந்தர குடியிருப்பு பெற தகுதியில்லாத 1,000 குடும்பத்தினர்க்கும் நிரந்தர வீடு வழங்குவது.

- தெலைந்து போனவர்களின் வங்கிக் கணக்கை தொடர அக்குடும்பத்தினர் அனுமதிக்கப்படுவர்.

- ரோடு மற்றும் சிறிய துறைமுகத்தின் கட்டுமானத்தை விரைவுபடுத்துவது.

- சுற்றுலா வளர்ச்சிக்கான திட்டங்கள் செயல்படுத்தப்படும் மற்றும் 10க்கும் மேற்பட்ட தீவுகள் சுற்றுலா பயணிகளுக்கு திறந்துவிடப்படும்.
- பாதுகாப்பு காரணங்களுக்காக திறந்துவிடப்படாத தீவுகளின் அல்லது தீவுகளின் ஒரு பகுதியை பற்றிய பட்டியலை தயார் செய்வது.

தீவுகளுக்கு செல்ல தடையை நீக்கி சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவது குறிப்பாக வெளிநாட்டு பயணிகள்
ஆதாரம் : : http://news.bbc.co.uk/2/hi/south_asia/4627684.stm

## தமிழ்நாடு

*குமரி மாவட்டத்தில் 18 சுனாமி தற்காலிக குடியிருப்பு எரிந்து சாம்பல்*

கன்னியக்குமரி மாவட்டம் பாலம் என்ற இடத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்வர்களுக்கு கொடுக்கபட்ட 18 தற்காலிக குடியிருப்பு தீப்பற்றி எரிந்து சாம்பல். ஒரு வீட்டில் ஏற்பட்ட மின் கசிவு காரணமாக இச்சம்பவம் நடந்தது. 4 லட்சம் ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் சேதம் அடைந்தது என்று தெரியவருகிறது. இந்த 18 குடும்பத்தை சார்ந்த 78 பேர் பாலம் நடுநிலை பள்ளியில தங்கவைக்கப்பட்டிருக்கினறனர். ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5லிட்டர் மண்ணெண்ணை, அரிசி, வேட்டி, சேலை மற்றும் நிவாரண தொகையாக ரூபாய் 1000 வழங்கப்பட்டது கூடுதல் ஆட்சியர் கூறுகையில் மிகவிரைவில் மீண்டும் அதே இடத்தில் தற்காலிக குடியிருப்புகள் அமைக்கப்பட்டு அவர்களுக்கு வழங்கப்படும் என்றார்.
ஆதாரம்: http://www.newindpress.com/NewsItems.asp?ID=IET20060129234922&Page=T&Title=Southern+News+%2D+Tamil+Nadu&Topic=0&

*சுனாமியால் பாதிக்கப்பட்வர்களுக்காக துவக்கப்பட்ட மறுவாழ்வு மையத்தில் நோயாளிகளின் கூட்டம்*

கன்னியக்குமரி மாவட்டத்தில் நடவுர்கரை என்ற சிறிய கிராமத்தில் மீனவர்கள் கலந்தாய்வு செய்வதற்காக மறுவாழ்வு மையம் துவக்கப்பட்டிருக்கிறது. சுனாமி பாதித்ததில் இருந்து இதுவரை இல்லாத அளவு மீனவர்கள் அம்மையத்திற்கு வர ஆரம்பித்து உள்ளனர்.
முதலில் குடி பழக்கத்தால் ஏற்படும் தீமைகளை மீனவர்களிடம் கூறி புரியவைப்பது கடினமாக இருந்தது. ஆனால் தற்பொழுது அவர்களே இந்த மையத்திற்கு வந்து சிகிச்சை பெற்று கொள்கிறார்கள். ஆயினும் சுனாமி ஏற்ப்பட்டதில் இருந்து. குடிப்பழக்கம் உள்ளவர்கள் 3,000 பேர் இந்த மையத்தின் மூலம் தானாகவோ அல்லது குடும்பத்துடனோ சேர்ந்து கலந்தாய்வு செய்து இலவச சிகிச்சை எடுத்துகொண்டனர். நோயாளிகளுக்கு மருத்துவ, மனோதத்துவம் மற்றும் மனோதத்துவ ஆதரவு வழங்கப்படுகிறது. மேலும் குழு சிகிச்சையும் அளிக்கப்படுகிறது. அதனால் கலந்தாய்வு குழுவினர் அவர்களின் பிரச்சனையை புரிந்து கொள்கின்றனர்.

மாவட்டத்தில் உள்ள அனைத்து மகளிர் காவல்துறையும், விவாகரத்து கேட்டு மனு செய்யும் முன் மனைவிகளிடம் இந்த மறுவாழ்வு மையத்தை அணுக பரிந்துரை செய்கிறார்கள்.
ஆதாரம்: http://www.hindu.com/2006/01/27/stories/2006012704540200.htm

## புதிய ஆன்லைன் வளங்கள்

- இந்திய பிரதமர் ஜனவரி 4ஆம் தேதி 2006 ஆம் ஆண்டு அந்தமான் மற்றும் நிக்கோபாரில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்ட பொழுது வெளியிட்ட சுற்றறிக்கையில் அந்தமானில் மேற்கொள்ளும் நிவாரணம் மற்றும் புனரமைப்பின் நிலவரத்தை பினவரும் இணையதளத்தில் காணலாம்.
  http://www.and.nic.in/post-tsunami.pdf

  சுனாமி பேரிடர் புனரமைபில் மாநிலம் மற்றும் நாகரீக சமூகம் தமிழ்நாடு சுனாமி அனுபவத்தை ஓர் அலசல் என்ற தலைப்பில் டாடா சமூக அறிவியல் நிறுவனத்தின் அறிக்கை பற்றிய விவாதத்தை டீரைநெட் (TRINET) இணையதளத்தில் காணலாம்.
  www.trinet.in/downloads/21decsdrep.doc

- தமிழ்நாடு அரசு சுனாமி சம்மந்தமான நடவடிக்கைகளை ஜனவரி மாதம் 15ஆம் தேதி 2006ஆம் ஆண்டு வரையிலான நிலவரத்தை தமிழ்நாடு அரசு இணையதளத்தில் காணலாம்.
  http://www.tn.gov.in/tsunami/tsunami-relief.htm

- தமிழ்நாடு அரசு சுனாமியை மீரிய சீரமைப்பு என்ற புத்தகத்தை முதலாம் ஆண்டின் நினைவாக வெளியிட்டுள்ளது இதை இணையத்தில் காணலாம்.
  http://www.tn.gov.in/tsunami/tiding_over_tsunami.htm

- சுனாமி புனரமையில் ஓர் மனித உரிமை மதிப்பீட்டு என்ற தலைப்பில் அக்ஷன் எய்டு (ACTION AID) என்ற தொண்டு நிறுவனம் ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளது அதை பின்வரும் இணையத்தளத்தில் காணலாம்.
  http://www.actionaid.org/wps/content/documents/TSUNAMI%20REPORT%20-%20for%20screen%20viewing.pdf


மொழி பெயர்ப்பு
திரு. ம. முருகானந்தம்
மின் அஞ்சல் : infoinde@ader-france.org

இலக்கணம் மற்றும் பிழைதிருத்தம்
திரு. மு. கணேஷ்

ஆக்கம்:
திரு. ச. சோழன்
தொலைபேசி : +91–(0) 99942 08811
மின்அஞ்சல் : sozhan6@sify.com

## நிகழ்வுகளின் பட்டியல்

| நிகழ்வுகள் | அமைப்பாளர் | தேதி/ காலம் | இடம் |
|---|---|---|---|
| **Workshop**<br>Governance in traditional fishing communities | TRINet<br>Ahana Lakshmi<br>98487 40404 | 15-02-06 | Image Conference Hall,<br>MRC Nagar, RA Puram, Chennai |
| **Workshop**<br>Effective Micro organism Technology, sanitation and hygiene | Auroville Knowledge Resource Centre,<br>Auroville Tsunami Rehab Project,<br>Email: cnussele@gmail.com | 18-02-06 | Auroville,<br>Tamil Nadu |
| **Workshop**<br>Eco-restoration | Auroville Knowledge Resource Centre,<br>Auroville Tsunami Rehab Project,<br>Email: cnussele@gmail.com | 20-02-06 | Auroville,<br>Tamil Nadu |

## தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

### புதுவை

| | |
|---|---|
| Laurent Tyers<br>Information Officer<br>Tel. +91 413 520 0606<br>Mobile : +91 98946 80458<br>Email : infoinde@ader-france.org | M. Muruganadam<br>Assistant Information Officer<br>Tel. +91 413 520 0606<br>Mobile : +91 98946 22240<br>Email : infoinde@ader-france.org |

### பிரான்ஸ்

| | |
|---|---|
| **ADER** : Association pour le Développement Economique Régional<br>Gionata Simioni,<br>Programme Manager<br>31 Rue de Reuilly, 75012 Paris - France<br>Tel. +33 1 40 24 03 03<br>Fax: +33 1 40 24 09 77<br>Email: contact@ader-france.org | **Fondation de France**<br>Martin Spitz,<br>Programme Manager :<br>Email: martin.spitz@fdf.org<br>Estelle Hédouin,<br>Programme Information Manager:<br>Email: estelle.hedouin@fdf.org |